CASE NO : ESIOP 64/2025

NAME : PW1 – S. சின்னசாமி

DATE : 26.03.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

மனுதாரர் நிறுவனம் கடந்த 2017ம் வருடத்தில் துவங்கப்பட்டது. மாதம் மற்றும் தேதி ஞாபகம் இல்லை. மனுதாரர் நிறுவனம் 2017க்கு முன்பு IT service வேலையை எடுப்பதற்காக ESI code number பெறப்பட்டது. அதில் எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றினார்கள் என்று கூறி ESI code பெறப்பட்டது என்றால் அனுமானத்தின் பெயரில் 26 பேர்கள் பணியாற்றுவார்கள் என்று குறிப்பிட்டு Code பெறப்பட்டது. கடந்த 07.03.2017 ல் form C-11 notice படி 56001170820001099 என்ற code 01.01.2017 துவங்கப்பட்டது கூறி ஒரு நோட்டீஸ் பெறப்பட்டது என்றால் சரிதான். அதில் 27 பணியாளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த notice யை நாங்கள் பெற்றோமா என்றால் ஞாபகம் இல்லை. பிப்ரவரி 2017 ல் மனுதாரர் நிறுவனம் துவங்கப்படவில்லை என்றும் அதில் 27 தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை என்று

குறிப்பிட்டு ஏதேனும் மறுப்பு தெரிவித்துள்ளேமா என்றால் எழுத்து மூலமாக தெரிவித்துள்ளோம். அதை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. 03.10.2017 தேதியிலேயே Non payment of contribution notice கடந்த ஜனவரி 2017 முதல் ஜீலை 2017 வரை தொழிலாளர்களுக்கான பங்களிப்பு தொகை ESI நிறுவனத்தால் அனுப்பப்பட்டது என்றும் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் அட்டையில் உள்ள seal எங்கள் நிறுவத்தினுடையது தான் என்றால் seal எங்கள் நிறுவனத்தினுடையது தான். அறிவிப்பு பெற்றோமா என்றால் தெரியவில்லை. அந்த notice யை மனுதாரர் நிறுவனத்தின் பணிபுரிபவர் யாராவது தான் பெற்றிருக்க முடியும் என்றால் பெற்றிருக்கலாம். Non compliance notice க்கு நாங்கள் பதில் கடிதம் அனுப்பியுள்ளோமா என்றால் அனுப்பியுள்ளோம். ஆனால் அந்த ஆவண்த்தை தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவில்லை. ESIக்கு மட்டுமல்லாமல் PFக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். PF account close செய்துவிட்டார்கள். PF account close செய்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. கடந்த 12.03.2018ல் எங்கள் நிறுவனம்

எதிர்மனுதாரர் நிறுவனம் 02/2017 முதல் 02/2018 வரையிலான காலத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டும் என்று அனுப்பிய **show cause notice** பெற்றுள்ளோம் என்றால் சரிதான். அந்த **show cause notice Ex** R1. அந்த **show cause notice** க்கு மனுதாரர் மறுப்பு தெரிவித்து பதில் கடிதம் அனுப்பினோமா என்றால் அனுப்பியுள்ளோம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் ஞாபகம் இல்லை. கடந்த 08.08.2019 ல் 02/2017 முதல் 06/2019 காலக்கட்டத்திற்குண்டான ரூ. 587832/- க்கான **C**-18 **adhoc notice** எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கான பதில் கடிதம் எதுவும் மறுப்பு தெரிவித்து நிறுவனம் நடத்தவில்லை என்று குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளோமா என்றால் **show cause notice and adhoc notice** பெற்றவுடன் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் **Deputy director** யை நேரடியாக சென்று நான் எங்கள் நிறுவனம் துவங்கவே இல்லை என்று பலமுறை கூறியும் அவர் என்னிடம் நீதிமன்றத்தில் போய் பார்த்து கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். 31.01.2020 தேதியில் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரர் நிறுவனத்தை ஆய்வு செய்தாரகளா என்றால் ஆய்வு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆய்வறிக்கை தான்

அந்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆய்வறிக்கை Ex R2. என்னிடம் காட்டப்படும் Icono Clastic Aspid Pvt Ltd., என்று காட்டப்பட்டு எடுக்கப்ப்டட புகைப்படம் எங்கள் நிறுவனத்தினுடையது தானா என்றால் இல்லை. நான் நிறுவனம் மூடப்பட்டுவிட்டது என்று தெரிவித்தேன். ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ள முகவரி சரிதானா என்றால் சரிதான். அதில் உள்ள ESI code number மனுதாரர் நிறுவனத்தினுடையது தான். ஆய்வுக்கு வந்த SSO வின் பெயர் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. ஆய்வு சமயத்தில் கடிதம் மூலமாக தான் மனுதாரர் நிறுவனம் மூடப்பட்ட விவரத்தை தெரிவித்தேனா என்றால் மேற்படி கடிதத்தை நான் நேரடியாக deputy director யிடம் கொடுத்தேன். மேற்படி கடிதத்தை கொடுத்த பின்பும் Deputy director நீங்கள் நீதிமன்த்தில் தான் பார்க்க வேண்டும் என்று கூறி அனுப்பிவிட்டார். கடந்த 20.06.2020ல் எதிரமனுதாரர் நிறுவனத்தில் ஆஜராகி மனுதாரர் சம்பந்தபட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று அனுப்பிய personal hearing notice யை பெற்று கொண்டோமா என்றால் பெற்று கொண்டோம். Personal hearing க்கும் ஆஜரானோம். அந்த நேர்காணலில் Ex P1 - Memorandum and Article of Association

மற்றும் என்னுடைய வேண்டுதல் கடிதத்தையும் தாக்கல் செய்தோம். அந்த கடிதத்தில் சுவாமிநாத சின்னசாமி மற்றும் சின்னசாமி தயால் ராஜ்குமார் ஆகியோர்கள் பங்குதாரர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் நிறுவனத்தில் யார் எல்லாம் நியமிக்க போகிறோம் என்ற விவரத்தை தெரிவித்துள்ளீர்களா என்றால் தெரிவித்துள்ளோம். மேற்படி விவரங்கள் அனைத்தும் நாங்கள் பெறப்போகும் order யை நம்பி கொடுத்தோம்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் அடிப்படையில் ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.